05.11.2026

தலைப்புச் செய்திகள்

1. நகர்புற வளர்ச்சிக்கான மத்திய அரசின் செயல்திட்டங்களே மிகப்பெரிய போக்குவரத்து மாற்றத்திற்கு வழிகோலியதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. தீபாவளி பண்டிகையை ஒட்டி சென்னை அருகே மறைமலை நகர் தற்காலிக பேருந்து நிலையத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு பேருந்துகள் இன்றுமுதல் இயக்கப்படுகின்றன.

3. தீபாவளி காய்கறி சிறப்பு தொகுப்பு திட்டத்தை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.காந்திராஜ் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

4. விவசாயிகளுக்கான அனைத்து பயிர் கடன்களையும் தமிழக அரசு முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

5. சென்னை ஓப்பன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் – ரஷ்யாவின் Anastasia -வை இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

பிரதமர் - மெட்ரோ

நாடுமுழுவதும் உள்ள 26 நகரங்களில் தற்போது ஆயிரத்து 200 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ இணைப்புகள் உள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை கூறியுள்ள பிரதமர் 2014 ஆம் ஆண்டு வெறும் ஐந்து நகரங்களில் 248 கிலோ மீட்டர் நீள மெட்ரோ பாதைகள் மட்டுமே இருந்ததாக கூறியுள்ளார்.

நகர்புற வளர்ச்சிக்காக மத்திய அரசின் தொடர் செயல்திட்டங்களே இப்பெரிய மாற்றத்திற்கு வழிகோலியதாக குறிப்பிட்டார்.

தற்போது நாளொன்றுக்கு ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் மெட்ரோ ரயிலில் பயணிப்பதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், இதன்மூலம் பயண நேரம் வெகுவாக குறைந்து குடும்பத்தினருடன் செலவிடும் நேரம் அதிகரித்திருப்பதாக எடுத்துரைத்தார்..

மேலும் உற்பத்தி பெருகி வேலை வாய்ப்புகளும் அதிகரித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

2014ஆம் ஆண்டில் இருந்த அதே நிலையில் மெட்ரோ செயல்பட்டிருந்தால் பல நகரங்களுக்கு மெட்ரோ இணைப்பு கிடைத்திருக்காது என்றும், அந்நிலை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் கூறியுள்ளார்.

****

பிரதமர்- பாரா விளையாட்டு

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆசிய பாரா விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற வீர வீராங்கனைகளுடன் புதுதில்லியில் இன்றுமாலை கலந்துரையாடுகிறார்.

இந்த கூட்டத்தில் பிரதமர் உரையாற்றுகிறார்.

ஜப்பானில் நடந்து முடிந்த ஆசிய போட்டிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் இந்தாண்டு இந்திய வீர வீராங்கனைகள் 114 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் பதக்கம் வென்ற தடகள வீரர்கள், பயிற்சியாளர்கள், பாராலிம்பிக் குழுவின் அதிகாரிகள், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

****

அஷ்விணி வைஷ்ணவ்

நாட்டின் ரயில் நிலையங்கள் அடுத்த 50 ஆண்டுகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மறு சீரமைக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் ஜெய்பூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழ்நாடு கேரளம், உள்ளிட்ட மாநிலங்களில் ரயில் நிலையங்கள், அந்தந்த நகருக்குரிய கட்டிட கலையை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் ஆயிரத்து 300 ரயில் நிலையங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதில் 400 நிலையங்களின் பணிகள் நிறைவடைந்ததை சுட்டிக்காட்டினார்.

ரயில்போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையிலும், பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தாண்டு பண்டிகை காலத்தில் 18 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

****

முதலமைச்சர்

சென்னை பொதிகை வளாகத்தில் உள்ள அரசு விருந்தினர் இல்லமான பாமணி இல்லத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று ஆய்வு செய்தார்.

இந்த இல்லத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

பாமணியில் முதலமைச்சரின் அலுவலகம் செயல்பட உள்ள நிலையில் இந்த ஆய்வு நடைபெற்றது.

****

நிர்மல் குமார்

தீபாவளி பண்டிகையின்போது மின்வெட்டு ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில மின் துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அதிக அளவில் பேருந்துகள் இயக்கவும், தனியார் பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதை கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

****

பேருந்து இயக்கம்

இதனிடையே தீபாவளி பண்டிகையை ஒட்டி தென் மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகளின் வசதிகளுக்காக சென்னை அருகே மறைமலை நகரில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் இன்றுமுதல் இயக்கப்படுகின்றன.

கும்பகோணம் - நாகப்பட்டினம் – சிதம்பரம் – மயிலாடுதுறை மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு செல்லும் வகையில் 600 பேருந்துகள் இந்த நிலையத்திலிருந்து இயக்கப்பட உள்ளன.

இதன்மூலம் பொதுமக்கள் கிளாம்பாக்கம் செல்லாமல் தங்களது சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

****

காந்திராஜ்

தீபாவளி பண்டிகையை ஒட்டி அரசு சார்பில் 10 வகையான காய்கறிகள் அடங்கிய சிறப்பு தொகுப்பு வழங்கும் திட்டத்தை

மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.காந்திராஜ் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 218 கூட்டுறவு விற்பனை நிலையங்களில் இந்த சிறப்பு தொகுப்பை 100 ரூபாய்க்கு பொதுமக்கள் நாளை மறுநாள் வரை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சியில் 10 இடங்களில் சிறப்பு காய்கறி தொகுப்பு விற்பனை நடைபெறுகிறது.

****

திருச்சி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் பசுமை பட்டாசுகளை மட்டுமே பயன்படுத்த மாநகராட்சி ஆணையர் திருமதி பொன்மணி கேட்டுக்கொண்டுள்ளார்.

மருத்துவமனைகள், வழிபாட்டு தலங்கள், பள்ளிகள், முதியோர்கள் வசிக்கும் பகுதிகள், அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அருகே பட்டாசுகள் வெடிப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க மாசில்லா தீபாவளியை கொண்டாட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

****

உதயநிதி

விவசாயிகளுக்கான அனைத்து பயிர் கடன்களையும் தமிழக அரசு முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

காவிரியில் முறையாக தண்ணீர் திறக்காததால் தான் குறுவை சாகுபடி பொய்த்ததாக சமூகவலைதளத்தில் குறை கூறியுள்ள அவர், விவசாயிகளின் நலன் கருதி உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் இடைத்தேர்தல் முடிந்து ஒருமாதம் நிறைவடைய உள்ள நிலையில் இன்னமும் விவசாயிகளுக்கான பயிர் கடன் தொடர்பாக அரசு மௌனம் காப்பது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

****

அன்புமணி

சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை முறையாக அறிவிக்கை செய்ய வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை அபகரிக்க சூழ்ச்சி நடைபெறுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் நடைபெறும் சாலை பணிகளை தடுக்காதது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

பள்ளிக்கரணை சதுப்பு நிலம் அழிந்தால் நீலாங்கரை உட்பட அனைத்து பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கும் அபாயம் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே முதலமைச்சர் நேரடியாக இந்த பிரச்சனையில் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

****

நாகை கொள்ளை

நாகை மாவட்டம் வேதாரண்யத்திற்கு கிழக்கே 6 கடல் மைல் தொலைவில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களை வழிமறித்து அவர்களிடமிருந்து மீன்பிடி உபகரணங்களை கடற்கொள்ளையர்கள் பறித்து சென்றுள்ளனர்.

புஷ்பவனம் மீனவர் கிராமத்தை சேர்ந்த இந்த மீனவர்களிடமிருந்து 250 கிலோ மீன்பிடி வலைகள்,

கைபேசிகள், 20 லிட்டர் டீசல் உள்ளிட்டவற்றை கொள்ளையடித்த பின்னர் கடற்கொள்ளையர்கள் தப்பி சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

****

ஆதார் திருச்சி

திருச்சியில் ஆதார் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் புதிய ஆதார் சேவா மையம் இன்று செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

இம்மையத்தில் விரைவாக புதிய ஆதார் அட்டைகளை பெற்றுக்கொள்ளவும்,

ஆதார் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இதன் திட்ட மேலாளர் திரு.விஜயகுமார் கூறியுள்ளார்.

****

சின்ன வெங்காயம்

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி வார சந்தையில் சின்ன வெங்காயம் கிலோ 80 ரூபாய்க்கு விற்கப்படுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

****

அணை

கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் கிருஷ்ணகிரி, தர்மபுரி திருவண்ணாமலை மாவட்ட தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோவை குற்றாலம் அருவியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்.

****

நாகை

நாகை - இலங்கை காங்கேசன் துறை இடையிலான கப்பல் போக்குவரத்து கட்டணம் ஐந்தாயிரத்து 500 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

இப்போக்குவரத்து தொடங்கி கடந்த இரண்டரை ஆண்டுகளில் இரு நாடுகளுக்கிடையே 55 ஆயிரத்து 310 பேர்

பயணம் மேற்கொண்டதாகவும் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

****

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தாலுக்காவில் விவசாயிகள் தனித்துவ அடையாள அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாம் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கம் திருக்கோவிலுக்கு செல்ல நாளைமுதல் நான்கு நாட்கள் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

****

மதுரை

மதுரை மாவட்டம் கல்லுப்பட்டியில் ஏழூர் சப்பர திருவிழா வெகு விமரிசையாக இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

****

டென்னிஸ்

சென்னை ஓப்பன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் – ரஷ்யாவின் Anastasia Zakharova- ஐ இன்று எதிர்கொள்கிறார்.

முன்னதாக மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் மாயா ராஜேந்திரன் முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் - போலந்தின் வெரோனிகாவை தோற்கடித்தார்.

இதன்மூலம் சானியா மிர்ஸாவிற்கு அடுத்து சர்வதேச போட்டிகளில் காலிறுதிக்கு முன்னேறிய இந்திய வீராங்கனை என்ற சாதனையை மாயா படைத்துள்ளார்.

****

பேட்மிண்டன்

கொரிய ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் அன்மோல் கார்ப் – ஜப்பானின் யமாகுச்சியுடன் மோத உள்ளார்.

****

ஹாக்கி

ஆசிய சேம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

மொஹாலியில் நடைபெறும் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்கும்.

வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் மலேசியா – தென்கொரியாவுடன் இன்று மோதுகிறது.

****